பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

26 09 2025 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசிய புவி அறிவியல் விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்குகிறார்.

2. பீகாரில் முதலமைச்சரின் மகளிர் வேலாவைாய்ப்புத் திட்டத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

3. உலகளாவிய வளர்ச்சிக்கு அமைதி மட்டுமே அடித்தளமாக அமையும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

4. வடகிழக்கு மாநிலங்களில் வேளாண் வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

5. இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான 19-வயதுக்கு உட்பட்டோருக்கான 3-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் தேசிய புவி அறிவியல் விருதுகளை வழங்குகிறார்.

1966-ம் ஆண்டுமுதல் சுரங்க அமைச்சகத்தால் வழங்கப்படும் இந்த விருது புவி அறிவியல், கனிம சுரங்கங்கள் உள்ளிட்ட பிரிவுகளில் சிறப்பாக செயல்படுவோருக்கு வழங்கப்படுகிறது.

தேசிய புவி அறிவியல் வாழ்நாள் சாதனையாளர் விருது, தேசிய புவி அறிவியல் விருது, இளம் தேசிய புவி அறிவியலாளர்கள் விருது என 3 பிரிவுகளாக இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

இன்றைய நிழ்ச்சியில் 9 தனிநபர் விருதுகளையும், 3 குழு விருதுகளையும் திருமதி திரௌபதி முர்மு வழங்கவுள்ளார்.

இந் நிகழ்ச்சியில் மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் திரு கிஷண் ரெட்டி, இணையமைச்சர் திரு சதீஷ் சந்திர துபே உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

பீகாரில் முதலமைச்சரின் மகளிர் வேலாவைாய்ப்புத் திட்டத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி காணொலி மூலம் இன்று தொடங்கி வைக்கிறார்.

மாநிலம் முழுவதும் 75 லட்சம் பெண்கள் பயனடையும் வகையில் 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதியை அவர் விடுவிக்க உள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் பெண்களின் வங்கிக் கணக்குகளில் 10 ஆயிரம் ரூபாய் செலுத்தப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் அடுத்தடுத்த கட்டங்களில் 2 லட்சம் ரூபாய் வரை கூடுதல் நிதியுதவி வழங்கப்படும் என்று பீஹார் அரசு கூறியுள்ளது.

இத்திட்டம் கால்நடை வளர்ப்பு, கைவினைப் பொருட்கள், தையல், நெசவு உள்ளிட்டவற்றில் பெண்களை ஊக்குவித்து அவர்களின் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உலகளாவிய வளர்ச்சிக்கு அமைதி மட்டுமே அடித்தளமாக அமையும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

நியூயார்க்கில் நடைபெற்ற ஜி20 வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய அவர், யுக்ரைன் மற்றும் காசாவில், நடைபெற்று வரும் மோதல்களால், எரிசக்தி, உணவு, உரங்கள் தொடர்பான விநியோகச் சங்கிலியில் பாதிப்பு ஏற்படுவதாகக் கூறினார்.

இதனால் வளரும் நாடுகளுக்கு செலவுகள் அதிகரிப்பதாக அவர் தெரிவித்தார்.

பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

பயங்கரவாதம், வளர்ச்சிக்குப் பெரிய அச்சுறுத்தலாக விளங்குகிறது என்றும் அவர் கூறினார்.

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக சமரசமற்ற நடவடிக்கைகளை அனைத்து நாடுகளும் மேற்கொள்ள வேண்டும் என்று டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

<<<<>>>>

வடகிழக்கு மாநிலங்களில் வேளாண் வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

சிக்கிமில் தோட்டக்கலைக் கல்லூரி கட்டடங்களை காணொலி மூலம் நேற்று திறந்து வைத்த அவர், மண்டல வேளாண் பயிலரங்கையும் தொடங்கி வைத்தார்.

நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் வேளாண் துறை மிகப் பெரிய வளர்ச்சியை எட்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இயற்கை விவசாயத்திற்கு அரசு அதிக முக்கியத்துவம் அளிப்பதாக கூறிய அவர், சிக்கிம் மாநில விவசாயிகள் இயற்கை விவசாயத்தில் அதிக ஈடுபாட்டுடன் செயல்படுவதாகக் கூறினார்.

நாடு முழுவதும் உற்பத்தியை அதிகரித்து, சாகுபடி செலவைக் குறைத்து, விலைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் கூறினார்.

நாட்டில் 46 சதவீத மக்கள் விவசாயத்தை வாழ்வாதாரமாக கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இத்துறையில் புத்தொழில் நிறுவனங்களுக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகவும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறினார்.

<<<<>>>>

நாட்டில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களால் வளர்ச்சி வேகம் அதிகரித்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

மும்பையில் நாளேடு ஒன்றின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட வங்கிகளுக்கான விருது வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், 2014ஆம் ஆண்டுக்கு முன்பு வங்கித் துறை செயல்பாடுகள் மோசமாக இருந்தன என்று கூறினார்.

2008ஆம் ஆண்டுக்கும் 2014ஆம் ஆண்டுக்கும் இடையே வழங்கப்பட்ட கடன்களால்தான் வங்கிகளின் வராக் கடன்கள் அதிகரித்ததாக அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், கடந்த 11 ஆண்டுகளில் வங்கித் துறையில் தற்போது வெளிப்படைத்தன்மை அதிகரித்துள்ளதாகவும், வராக் கடன்கள் குறைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

உலகளாவிய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாட்டின் பொருளாதாரம் வலுவாக உள்ளது என்று திரு. அமித் ஷா குறிப்பிட்டார்.

<<<<>>>>

துறைமுகங்களில் பசுமை எரிசக்தியை ஊக்குவிக்க அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

மும்பை துறைமுகத்தில் மின்சார வாகன பயன்பாட்டை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

துறைமுகங்களில் பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தின் மூலம் தூய எரிசக்திக்கான நடைமுறைகள் வலுப்படுத்துப்படும் என்று அவர் கூறினார்.

கப்பல் கட்டுமானத் துறையில் 2030ஆம் ஆண்டுக்குள் முதல் 10 இடங்களுக்குள்ளும், 2047ஆம் ஆண்டுக்குள் முதல் 5 இடங்களுக்குள்ளும் முன்னேற வேண்டும் என்ற இலக்குடன் இந்தியா செயல்பட்டு வருவதாக திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

<<<<>>>>

ஆசிய நாடுகளுடனான வர்த்தக ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக மத்திய வர்த்தகத்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.

கோலாலம்பூரில் நேற்று நடைபெற்ற 13வது கிழக்காசிய வர்த்தக அமைச்சர்கள் மாநாட்டில் பேசிய அவர், நிலைத்தன்மை மற்றும் டிஜிட்டல் மாற்றங்களுக்கு இந்தியா முக்கியத்துவம் அளிப்பதாகத் தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு இடையே நியூசிலாந்து, கம்போடிய வர்த்தக அமைச்சர்களுடன் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்தும் அவர் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் மலேசிய வர்த்தக கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடனும் திரு. ஜிதின் பிரசாதா ஆலோசனை மேற்கொண்டார்.

<<<<>>>>

நிகரகுவாவின் வளர்ச்சிக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கும் என்று வெளியுறவுத் துறை இணையமைச்சர் திரு பபித்ரா மார்கரிட்டா கூறியுள்ளார்.

அந்நாட்டில் இந்தியாவின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ள துணை மின்நிலையங்களின் தொடக்க விழா நேற்று நடைபெற்றது.

அந்நாட்டுக்கான இந்திய தூதர் திரு சுமித் சேத் மற்றும் நிகரகுவா எரிசக்தித் துறை அமைச்சர் திரு சால்வடார் மான்செல் ஆகியோர் நேற்று திறந்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் காணொலி மூலம் உரையாற்றிய வெளியுறவு இணைமைச்சர், இந்தியா - நிகரகுவா நட்புறவு திட்டத்தின் அடிப்படையில் அந்நாட்டின் வளர்ச்சிக்கு இந்தியா உதவி வருவதாகத் தெரிவித்தார்.

இந்தியாவின் உதவியுடன் செயற்கை உறுப்புகள் பொருத்தும் திட்டம் நிகரகுவாவைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கு பெரிதும் பயன் அளிக்கும் என்று திரு பபித்ரா மார்கெரிட்டா குறிப்பிட்டார்.

<<<<>>>>

பாரம்பரிய மருத்துவம் தொடர்பான உலக சுகாதார அமைப்பின் உச்சி மாநாட்டை வரும் டிசம்பர் 17ஆம் தேதி முதல் 19ஆம் தேதி வரை இந்தியா நடத்தவுள்ளதாக ஆயுஷ் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கான ஒப்பந்தம் ஆயுஷ் அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் முன்னிலையில் புதுதில்லியில் நேற்று கையெழுத்தானது.

சான்றுகள் அடிப்படையிலான பாரம்பரிய மருத்துவத்தை ஊக்குவிக்க, உலக சுகாமார அமைப்புடன் இணைந்து செயல்படுவதாக ஆயுஷ் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பாதுகாப்புத் துறையில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த இந்தியாவும் - மியான்மரும் முடிவு செய்துள்ளன.

நொய்டாவில் நேற்று நடைபெற்ற இருதரப்பு கூட்டத்தில் பாதுகாப்புத் துறைச் செயலாளர் திரு ஆர்கே சிங்கும் மியான்மர் ஆயுதப்படை தலைவர் திரு கியாவ் கோ-வும் பங்கேற்றனர்.

இதில் திறன் மேம்பாடு, இருதரப்புப் பயிற்சி, மியான்மரில் நிலநடுக்கத்திற்கு பிந்தைய தொடர் உதவி போன்றவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நேபாளத்தில் நல்லாட்சியை வழங்க அரசு உறுதிபூண்டுள்ளதாக அந்நாட்டின் பிரதமர் திருமதி சுஷிலா கார்க்கி கூறியுள்ளார்.

இடைக்கால அரசின் தலைவராக பொறுப்பேற்ற பின் நேற்று முதல் முறையாக அவர் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

மக்கள் நலனில் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசின் திட்டப் பலன்கள் பொதுமக்களுக்கு தடையற்ற வகையில் சென்றடைவதை அரசு ஊழியர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

வரும் மார்ச் 5-ம் தேதி சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்த அரசு உறுதிபூண்டுள்ளதாக அவர் கூறினார்.

அரசின் நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று திருமதி சுஷிலா கார்க்கி கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மேற்கு வங்கம் அருகே வங்கக் கடல் பகுதியில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக மாறியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது மேற்கு நோக்கி நகர்ந்து தெற்கு ஒடிசா மற்றும் வடக்கு ஆந்திர இடையே இது கரையைக் கடக்கும் என்று என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக மேற்கு வங்கத்தின் புர்பா, ஜார்கிராம், புருலியா, பங்குரா, நாடியா ஆகிய மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதனிடையே முர்ஷிதாபாத் மற்றும் கொல்கத்தாவின் சில இடங்களில் நேற்று இரவு கனமழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான 19-வயதுக்கு உட்பட்டோருக்கான 3-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

பிரிஸ்பேனில் இப்போட்டி காலை மணி 9.30க்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று, இந்தியா ஏற்கனவே தொடரைக் கைப்பற்றியுள்ளது.

<<<<The End>>>>